# திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

**மானியக் கோரிக்கை எண். 36**

அறிவிப்புகள்

2022 - 2023

# திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

மானியக் கோரிக்கை எண். 36

அறிவிப்புகள்

2022 - 2023


முனைவர் பழனிவேல் தியாக ராஜன்

நிதி மற்றும் மனித வள

மேலாண்மைத் துறை அமைச்சர்

1) நீடித்த வளர்ச்சி இலக்குகள் ஒருங்கிணைப்பு மையத்தை அமைத்தல்.

திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்துடன் (UNDP) இணைந்து நீடித்த வளர்ச்சி இலக்குகள் ஒருங்கிணைப்பு மையத்தை (SDGCC) மாநிலத்தில் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் முன்னேற்றத்திற்காகவும் அனைத்து துறைகளிலும் நீடித்த வளர்ச்சி இலக்குகளை நிறுவனமயமாக்கும் நோக்கத்திற்காகவும் அமைக்கும்.

**(Formation of Sustainable Development Goals Coordination Centre.**

**The Planning and Development Department will set up the Sustainable Development Goals Coordination Centre (SDGCC) in association with the United Nations Development Programme (UNDP) for furtherance of the Sustainable Development Goals (SDGs) in the State and with the object of institutionalising SDGs in all the Departments).**

திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் கீழ் ஒரு சிறப்புப் பிரிவாக ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்டத்துடன் (UNDP) இணைந்து அமைக்கப்படும்

நீடித்த வளர்ச்சி இலக்குகள் ஒருங்கிணைப்பு மையமானது (SDGCC), நீடித்த வளர்ச்சி இலக்குகள் கட்டமைப்பின் கீழ் மாநிலத்தின் செயல்திறனை வலுப்படுத்தவும் மற்றும் ஆய்வு, பகுப்பாய்வு, அறிக்கையிடல், திறன் மேம்பாடு, உள்ளூர் மயமாக்கல், வள ஒதுக்கீடு, நிரலாக்கம், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு போன்ற இனங்களில் உதவ ஏதுவாக இருக்கும்.

நீடித்த வளர்ச்சி இலக்குகளை விரைவாக அடையும் பொருட்டு திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை மற்ற துறைகளுடன் இணைந்து பணியாற்ற பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச் சூழல் குறித்த பிரச்சனைகளை உள்ளடக்கிய ஒரு ஒருங்கிணைந்த வளர்ச்சி செயல் திட்டத்திற்கு தேவையான தொழில்நுட்ப நிபுணத்துவத்தினை மாநில அரசுக்கு ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்டம் (UNDP) தனது கூட்டாண்மையின் மூலம் வழங்கும்.



2) சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் (SADP) வருடாந்திர செயல் திட்டத்தினை, போபாலில் உள்ள திட்டமிடல் மற்றும் கட்டிடக்கலைப் பள்ளியுடன் இணைந்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறையின் கீழ் நகர் ஊரமைப்பு இயக்ககத்தால் தயாரிக்கப்படும் விரிவான மண்டலத் திட்டத்தின் அடிப்படையில் மாற்றியமைத்தல்.

**(Reorientation of annual action plan of the Special Area Development Programme (SADP) based on a comprehensive regional plan being prepared by the Directorate of Town and Country Planning under the Housing and Urban Development Department in association with School of Planning and Architecture, Bhopal).**

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையானது அதன் அரசாணை (நிலை) எண்.136, தேதி 02.12.2021-இன்படி, இயக்குநர், நகர் ஊரமைப்பு அவர்களுக்கு கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களுக்கு போபாலில் உள்ள திட்டமிடல் மற்றும் கட்டிடக்கலைப் பள்ளி (School of Planning and Architecture) மூலமாக மண்டல திட்டங்கள்

தயாரிக்கும் பொருட்டு ரூ.2,75,11,050/-க்கு அனுமதி அளித்துள்ளது. நீலகிரி மாவட்டம் முழுவதும் நீலகிரி மண்டல திட்டத்தின் கீழ் வருவதால், சுற்றுச் சூழலுக்கு ஏற்ற வகையில் மலைப் பகுதிகளின் மேம்பாடு தொடர்பான பணிகளை மேற்கொள்ளுவதற்காக திட்டம் மற்றும் வளர்ச்சி துறையின் அதிகார வரம்பிற்குட்பட்ட, சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தை நீலகிரி மண்டல திட்டத்தை மேம்படுத்தும் பணியில் ஈடுபட அறிவுறுத்தப்படலாம்.

அதன்படி ஏற்கனவே தொழில்நுட்ப உதவிக்காக ஜெர்மன் தொழில்நுட்ப நிறுவனத்துடன் (GIZ) திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) செய்துள்ள வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையானது, நகர் ஊரமைப்பு இயக்ககத்திற்கும் மற்றும் திட்டமிடல் மற்றும் கட்டிடக்கலைப் பள்ளி, போபாலுக்கும் இடையே கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தில் நீலகிரி மண்டல திட்டம் 2042-ஐ தயாரிப்பதற்காக சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை (SADP) சேர்க்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்.



நீலகிரி மாவட்டத்தின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக, சுற்றுச் சூழலுக்கு ஏற்ற வகையில், நீலகிரி மண்டலத் திட்டத்தின் அடிப்படையில், சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை முழுமையாக உருவாக்கி செயல்படுத்த இந்த ஒருங்கிணைப்பு உதவும்.

இந்த அணுகுமுறையானது வெற்றி அடைந்தவுடன், சிறப்புப் பகுதி மேம்பாட்டு திட்டத்தை உள்ளடக்கிய மாநிலத்தின் மற்ற மலைப்பகுதிகளில், நகர் ஊரமைப்பு இயக்ககத்திற்கும் மற்றும் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கும் இடையேயான ஒத்திசைவு இதுபோன்ற மண்டல திட்டங்கள் தயாரிக்க அடிப்படையாக அமையும்.

3) சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-I நீட்டிப்புத் திட்ட வழித்தடத்தில் உள்ள நிலையங்களை அணுகும் வசதிகளை மேம்படுத்துதல்.

**(Enhancement of Station Access Improvements along Chennai Metro Rail Project Phase-I Extension corridor).**

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் - கட்டம்-I நீட்டிப்பு வழித்தடத்தில் உள்ள மெட்ரோ நிலையங்களில் பன்முகப் போக்குவரத்து ஒருங்கிணைப்பு மேம்பாடு, அணுகும் வசதிகளை அதிகரித்தல் மற்றும் ஒட்டுமொத்த தோற்றத்தை மேம்படுத்துதல் போன்ற மேம்பாட்டுப் பணிகளை ரூ.30 கோடி செலவில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மேற்கொள்ளும்.



4) சென்னை மெட்ரோ இரயில் திட்டம் - கட்டம்-II - வழித்தடம்-4ஐ பூந்தமல்லி புறவழிச் சாலையிலிருந்து திருப்பெரும்புதூர் வரை நீட்டித்தல் - சாத்தியக்கூறு ஆய்வு.

**(Chennai Metro Rail Project–Phase-II–Extension of Corridor - 4 from Poonamallee Bypass upto Sriperumbudur - Feasibility Study).**

திருமழிசையில் உத்தேசிக்கப்பட்டுள்ள துணை நகரியம் மற்றும் நகரங்களிடையேயான பேருந்து முனையம் மற்றும் சென்னை - பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி பெருகிவரும் தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு சென்னை மெட்ரோ இரயில் திட்டம் - கட்டம்-II இன் வழித்தடம்-4ஐ பூந்தமல்லி புறவழிச் சாலையிலிருந்து திருப்பெரும்புதூர் வரை நீட்டிப்பதற்கான ஒரு விரிவான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்படும்.

5) சென்னை மெட்ரோ இரயில் திட்டம் -கட்டம்-II - வழித்தடம்-5ஐ திருமங்கலத்திலிருந்து ஆவடி வரை நீட்டித்தல் - சாத்தியக்கூறு ஆய்வு.

**(Chennai Metro Rail Project – Phase-II – Extension of Corridor-5 from Thirumangalam upto Avadi - Feasibility Study).**

மக்கள் தொகை அதிகமாக உள்ள சென்னைப் பெருநகர்ப் பகுதியின் வடமேற்குப் பகுதியில், போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக, சென்னை மெட்ரோ இரயில் திட்டம் - கட்டம்-II இன் வழித்தடம்-5ஐ திருமங்கலத்திலிருந்து, முகப்பேர் மற்றும் அம்பத்தூர் வழியாக ஆவடி வரை நீட்டிப்பதற்கான ஒரு விரிவான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்படும்.



6) சென்னை மெட்ரோ இரயில் திட்டம் - கட்டம் - II - வழித்தடம்-3ஐ சிறுசேரியிலிருந்து கேளம்பாக்கம் வரை நீட்டித்தல் - சாத்தியக்கூறு ஆய்வு.

**(Chennai Metro Rail Project – Phase-II –Extending Corridor-3 from Siruseri to Kelambakkam-Feasibility Study).**

உருவாகிவரும் குடியிருப்பு மற்றும் வணிக ரீதியான மேம்பாடு ஆகியவற்றால் ஏற்படும் போக்குவரத்து தேவையை மதிப்பீடு செய்து மெட்ரோ இரயில் இணைப்பினை ஏற்படுத்துவதற்காக, சென்னை மெட்ரோ இரயில் திட்டம் - கட்டம்-II இன் வழித்தடம்-3ஐ சிறுசேரியிலிருந்து கேளம்பாக்கம் வரை நீட்டிப்பதற்கான ஒரு விரிவான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்படும்.

7) சென்னை மெட்ரோ இரயில் திட்டம் – கட்டம்-II- இன் வழித்தடம்-3ஐ மேலும் கேளம்பாக்கத்திலிருந்து மாம்பாக்கம் மற்றும் வண்டலூர் வழியாக கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் வரை நீட்டித்தல் - சாத்தியக்கூறு ஆய்வு.

**(Chennai Metro Rail Project – Phase-II – Extending Corridor-3 further from Kelambakkam to Kilambakkam Bus Terminal via Mambakkam and Vandalur - Feasibility Study)**

இந்தப் பகுதியில் தொடர்ந்து அதிகரித்து வரும் மேம்பாடுகளினால் ஏற்படும் போக்குவரத்துத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் ஜிஎஸ்டி சாலை (NH 45) மற்றும் ராஜீவ் காந்தி சாலைக்கு (OMR) இடையே இணைப்பினை ஏற்படுத்துவதற்காக, சென்னை மெட்ரோ இரயில் திட்டம் - கட்டம்-II இன் வழித்தடம்-3ஐ மேலும் கேளம்பாக்கத்திலிருந்து மாம்பாக்கம் மற்றும் வண்டலூர் வழியாக கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் வரை நீட்டிப்பதற்காக தனியாக ஒரு சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்படும்.



8) சென்னை நகரில் நகரப் போக்குவரத்து அமைப்புகளை ஒருங்கிணைத்தல் - பெருந்திரள் துரிதப் போக்குவரத்து அமைப்பின் இயக்கம் மற்றும் பராமரிப்பினை தென்னக இரயில்வேயிடமிருந்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் எடுத்துக் கொள்ளுதல்.

**(Integration of urban transport systems in Chennai city - Taking over operation and maintenance of Mass Rapid Transit System (MRTS) from Southern Railways by Chennai Metro Rail Limited (CMRL)).**

சென்னை நகரில் உள்ள நகரப் போக்குவரத்து அமைப்புகளின் நிர்வாகம் மற்றும் ஒருங்கிணைந்த இயக்கம் ஆகியவை எதிர்காலத்தில் பலனளிக்கும் என்பதை கருத்தில் கொண்டு இரயில் பெட்டிகளை தரம் உயர்த்துதல் உள்ளிட்ட பயணிகள் வசதிகளை மேம்படுத்துவதற்காக பெருந்திரள் துரிதப் போக்குவரத்து அமைப்பின் இயக்கம் மற்றும் பராமரிப்பை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் எடுத்துக் கொள்ளுவதற்கான கருத்துருவின் மீது ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறுவதற்கு இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளும்.

9) சென்னைப் புறநகர் இரயில் அமைப்பின் குறிப்பாக சென்னை கடற்கரை முதல் செங்கல்பட்டு வரை, தென்னக இரயில்வேயுடன் கூட்டு சேர்ந்து குளிர்பதன இரயில் பெட்டிகளை அறிமுகம் செய்தல் - சாத்தியக்கூறு ஆய்வு.

**(Introducing air-conditioned coaches in Chennai Sub-Urban Railway System particularly from Chennai Beach to Chengalpattu in collaboration with the Southern Railways – Feasibility Study).**

புறநகர் இரயில் பயணிகளுக்கு வசதியை ஏற்படுத்துவதற்கும் பயணத்தை எளிதாக்குவதற்கும் தென்னக இரயில்வேயுடன் கூட்டு சேர்ந்து குறிப்பாக சென்னை கடற்கரை மற்றும் செங்கல்பட்டிற்கு இடையே இயக்கப்பட்டு வரும் புறநகர் இரயில்களில் குளிர்பதன இரயில் பெட்டிகள் மற்றும் பயணிகள் விரும்பும் வசதிகளைக் கொண்ட இரயில் பெட்டி அறைகள் அறிமுகம் செய்வது குறித்து விரிவான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்படும்.

**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்**

நிதி மற்றும் மனித வள
மேலாண்மைத் துறை அமைச்சர்